7 ஏப்ரல் 2024
ஈஸ்டர் காலத்தின் 2 ஆம் ஞாயிறு
(இறை இரக்கத்தின் ஞாயிறு)

NEW WAY OF BEING CHURCH
newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**
ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக பெண்களின் மதிப்பையும் மாண்பையும் கொண்டாடுதல்

# தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்

கொடுங்கள், அனைவரின் தேவையும் நிறைவடையும்வரை கொடுங்கள். அதுவே தொடக்கக் கால திருஅவையின் தெளிவான அழைப்பாக இருந்தது. “நம்பிக்கைக் கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. அப்போஸ்தலர்கள் தூய ஆவியால் வலுவூட்டப்பெற்றதால், மாபெரும் சாட்சிகளாகத் திகழ்ந்த காலம் இது.




உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் பேசும் விதம் வேதக்கோட்பாடுகளில் இருந்து அல்ல. கண்ணால் கண்டதன் அடிப்படையிலும் நம்பிக்கையின் பேரார்வத்துடனும் அவர்கள் சாட்சியம் கூறினார்கள்.

எது அவர்களை ஏற்றுக்கொள்ள வைத்தது? அவர்களின் மரபணு கோட்பாடு என்ன? ஆன்மீகத்திலும், பொருளாதாரத்திலும் ஏழைகளாய் இருந்தவர்களை இரக்கத்தோடு அணுகியது நம்பிக்கையாளர்களின் குணநலன்களில் ஒன்று. இயேசு இந்த உலகில் வாழ்ந்தபோது, அவருடைய முழு வாழ்க்கையும் இரக்கத்தின் தனி சான்றாக இருந்தது. நம் அன்னை கன்னிமரியா, தம்முடைய வாழ்த்துப்பாடலில் இவ்வாறு பாடுகிறார். தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். திருப்பாடல் ஆசிரியரும் இதை எதிரொலிக்கிறார். “என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு” இரக்கம் என்ற நற்குணத்தால் கடவுள் நிறைந்திருப்பதால், நம்பிக்கையாளர்கள் இரக்கத்தால் அரவணைக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இன்று நாம் இறை இரக்கத்தின் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இது குறிப்பாக திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் அவர்களின் ஒப்புதலுடன் மகத்தான ஆதரவைப் பெற்றுள்ளது.

இயேசு தம் சீடர்களுக்கு ஒரு முறை அல்ல இருமுறை தோன்றியதை நற்செய்தியில் கூர்ந்து கவனிப்போம். ஒருவேளை தோமாவுக்காக இயேசு இரண்டாம் முறை வந்திருக்கலாம். இரக்கத்தின் ஆண்டவர் ஐயமுற்ற அப்போஸ்தலரிடம் தம் காயங்களைக் காட்டும்போது, தோமா “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!” என்று அறிக்கையிட்டு ஏற்றுக்கொண்டார். மேலும் அவரை அறிவிக்கவும் செய்தார்.

சிலுவையின் வழியாக இரத்தமும் நீரும் பாய்ந்தோடி கடவுளின் எல்லையற்ற இரக்கம் காட்டப்படுகிறது. மேலும் இயேசு தண்ணீராலும் இரத்தத்தினாலும் வருவதை தூய ஆவியார் உறுதியளிக்கிறார். இயேசுவின் இறை இரக்கம் சிவப்பு மற்றும் வெண்மையான இரண்டு ஒளிக்கதிர்களாக அவரது இதயத்திலிருந்து ஒளிவீசுகிறது. இயேசு இன்னும் எழுதப்படாத பல அற்புதங்களை செய்தார் என்று விவிலியம் கூறுகிறது. இன்று புனித ஃபாஸ்டினாவின் பார்வையின் வழியாக, உலகெங்கிலும் உள்ள இறைமக்கள் அன்றாடம் இறை இரக்கத்தின் மன்றாட்டு மாலையை இறைவேண்டல் செய்கின்றார்கள். நாமும் இறைவனிடம் முழு நம்பிக்கையுடனும், நன்றியுடனும் “இயேசுவே உம்மில் என் நம்பிக்கையை வைக்கிறேன்” என்று நன்றியோடு கூறும்போது இதுவே இறை இரக்கத்தின் அடையாளமாக இருக்கும்.

கடவுளின் மென்மையான முகத்தை, அவருடைய இரக்கத்தை எவ்வாறு உருவகப்படுத்துவது என்பதைப் பெற்றி பெண்களுக்குத் தெரியும்
– திருத்தந்தை பிரான்சிஸ்







**இன்றைய இறைவார்த்தை:**

திப: 4: 32-35

திபா: 118: 2-4, 16-18, 22-24

1 யோ: 5:1-6

யோ: 20:19-31

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org